**தன்னாட்சி**
***(உள்ளாட்சி உங்களாட்சி)***
**பதிவு எண்: 272/2018**
69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**க.சரவணன்**
தலைவர்
97512 37734

**நந்தகுமார் சிவா**
பொதுச் செயலாளர்
90032 32058

**18.08.2021**

பெறுநர்,

திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப (ஓய்வு)
தலைவர், ஆறாவது மாநில நிதிக்குழு, தமிழ்நாடு,
கால்நடை மருத்துவமனை வளாகம்,
571, அண்ணா சாலை, நந்தனம்,
சென்னை 600035

ஐயா, வணக்கம்

**பொருள்: உள்ளாட்சிகளுக்கான நிதி பகிர்வு உள்ளிட்ட சீர்திருத்தங்கள் – தொடர்பாக**

தமிழகத்தில் உள்ளாட்சிகளை வலுப்படுத்துவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறது, தன்னாட்சி.

தற்போது 6 வது மாநில நிதிக்குழு தனது அறிக்கையினை தயார் செய்து வரும் நிலையில், உள்ளாட்சிகளுக்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வரும் எங்களைப் போன்ற சமூக இயக்கங்களின் சார்பாக உள்ளாட்சிகளுக்கான நிதிப் பகிர்வு உள்ளிட்ட சீர்திருத்தங்களை உங்கள் பார்வைக்கு இக்கடிதத்தின் மூலம் கொண்டு வருவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

**கோரிக்கைகள்**

**மாநில நிதிக்குழு நிதி மற்றும் மத்திய நிதி கிடைப்பதில் உள்ள சிக்கல்கள்**

ஊரடங்கு காலத்தில் SFC முறையாக விடுவிக்கப்படவில்லை. இதனால், ஊராட்சி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. அதேபோல, மத்திய நிதிக்குழு நிதி ஊராட்சிகளுக்கு உடனடியாக விடுவிக்கப்படுவதில்லை. மிகுந்த காலதாமதம் ஆகிறது.

**நிதி கையாள்வதில் அலுவலர்களின் தலையீடு**

மத்திய நிதிக் குழு நிதியின் அடிப்படை நிதியைக் கூட (CFC, Basic Grant) ஊராட்சியின் உள்ளூர் தேவைகளுக்கு ஊராட்சி தலைவர்கள்/துணைத் தலைவர்கள் சுயமாக முடிவெடுத்துப் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. வட்டார வளர்ச்சி அலுவலர் உத்தரவின் பேரிலேயே அது

செலவழிக்க வேண்டுமென்ற வாய்மொழி உத்தரவு மூலம் ஊராட்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

**முழுமையான நிதிப் பகிர்வு தேவை**

அரசாணை நிலை எண் 84 ஊ.வ.ஊ துறை நாள் 31.3.2017 மூலம் ஊரக உள்ளாட்சிகளுக்கான பங்குத் தொகையில் 20% தொகை, வேறு உட்கட்டமைப்பு பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற அரசாணைகள் ரத்து செய்யப்பட்டு உள்ளாட்சிகளுக்கான நிதிகள் முழுமையாக உள்ளாட்சிகள் வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

**மாநில நிதிக்குழு நிதியினை உயர்த்தித் தர வேண்டும்**

தமிழகத்தில் கடந்த 24 ஆண்டுகளாக உள்ளாட்சிகளுக்கு வழங்கப்படும் SFC 10 சதவீதமாக மட்டுமே உள்ளது. மாநில அரசு இதைக் கவனத்தில் கொண்டு இந்த நிதியை படிப்படியாக உயர்த்தி தரவேண்டும். அதோடு ஒவ்வொரு ஊராட்சிக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை பட்ஜெட்டில் தனி இணைப்பாக வழங்க வேண்டும்.

**தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்கள்**

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்-1994 ன் அடிப்படையில்,1996 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் உள்ளாட்சித் தேர்தல் முதலே, ஊராட்சி செயலர்களை நியமிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடம்தான் இருந்தது. ஆனால் 2013 ஆம் ஆண்டு தொடங்கி, கிராம ஊராட்சிகளின் செயலர்கள் நியமனம் மாவட்ட அளவிலான நியமனக் குழு மூலம் நடைபெறுகிறது [அரசாணை நிலை எண்: 72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்: 09.07.2013]. ஊராட்சி செயலர்களை நியமிக்கும் அதிகாரம் கிராம ஊராட்சிகளிடமே மீண்டும் அளிக்கப்பட வேண்டும்.

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இன் பிரிவு 205 , மக்கள் பிரதிநிதிகளான ஊராட்சித் தலைவரை ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர் பதவி நீக்கம் செய்ய அதிகாரம் வழங்குகிறது. இது முற்றிலும் மக்களாட்சிக்கு எதிரானது. எனவே இந்த வழிமுறையை ரத்து செய்து, அந்த அதிகாரத்தைச் சம்மந்தப்பட்ட கிராமசபைக்கு வழங்க வேண்டும்.

- கிராம ஊராட்சிப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் மாதாந்திர மதிப்பூதியம் மிகவும் குறைவாக உள்ளது. அதனை உயர்த்தி வழங்க வேண்டும். குறைந்தபட்ச மாதாந்திர மதிப்பூதியமாக கீழ்க்கண்ட தொகையை நிர்ணயிக்கலாம்.

    1. கிராம ஊராட்சித் தலைவர்: ரூ.15,000/-
    2. கிராம ஊராட்சித் துணைத் தலைவர்: ரூ.7,000/-
    3. கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்: ரூ.5,000/-

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 இல் உரியச் சட்டத் திருத்தங்கள் செய்து அனைத்து மூன்றடுக்கு ஊராட்சிகளிலும் அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 29 பொருள்கள் குறித்த நிதிகள், செயல்பாடுகள், அலுவலர்கள் தொடர்பான

முறையான அதிகாரப்பரவல் உறுதி செய்யப்பட வேண்டும். இதுகுறித்து விரிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ள ஊரக உள்ளாட்சிகளின் அதிகாரப் பகிர்வுக்காக அமைக்கப்பட்ட உயர்மட்ட குழுவான எல்.சி.ஜெயின் குழுவின் (1997 ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு) பரிந்துரைகளை அரசு கருத்தில் கொள்ள வேண்டும்.

- தற்போதுள்ள உள்ளாட்சிகளுக்கான முறை மன்றம் நகர்ப்புற உள்ளாட்சிகளின் கோரிக்கைகளை மட்டுமே பரிசீலிக்கிறது. அது ஊரக உள்ளாட்சிகளுக்கான கோரிக்கைகளையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் அமைப்பாக மாற்ற வேண்டும்.

**கிராம ஊராட்சி நிர்வாகம் சம்பந்தமான சீர்திருத்தங்கள்**

கிராம ஊராட்சிப் பொது நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளில், 2 லட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்பீடுள்ளப் பணிகளுக்கு, மாவட்ட ஆட்சியரிடம் நிர்வாக அனுமதி பெற வேண்டிய கட்டாயம் உள்ளது (அரசாணை நிலை எண்: 203, ஊ.வ மற்றும் ஊ.து, நாள்: 20.12.2007). கடந்த 13 ஆண்டுகளுக்கும் மேல் நடைமுறையில் இருக்கும் இந்த அரசாணை, தற்போதைய பொருளாதாரச் சூழலைப் பிரதிபலிக்கும் வகையில் இல்லை. எனவே, கிராம ஊராட்சிப் பொது நிதியின் கீழ் செயல்படுத்தப்படும் பணிகளில், 10 லட்சம் ரூபாய் வரை மதிப்பீடு உள்ள பணிகளுக்கான நிர்வாக அனுமதியினை வழங்க, சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

**நகர்ப்புற உள்ளாட்சிகள்**

- தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம்-1994 போன்று அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கெனப் பொதுச் சட்டம் மற்றும் விதிகள் இயற்றப்பட்டு, அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

- அனைத்து நகர்ப்புற உள்ளாட்சிகளிலும், உரிய சட்டத்திருத்தங்கள் மூலம், அரசியலமைப்புச் சட்டத்தின் 12வது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, 18 பொருள்கள் குறித்த நிதிகள், செயல்பாடுகள், அலுவலர்கள் தொடர்பான, முறையான அதிகாரப்பரவல் உறுதி செய்யப்பட வேண்டும்.

அரசுக்கான தங்களின் குழு பரிந்துரைகளில் இந்த சீர்திருத்தங்கள் இடம் பெற வேண்டுகிறோம்.

நன்றியுடன்,








(க.சரவணன்)
தலைவர்

(நந்தகுமார் சிவா)
பொதுச் செயலாளர்